

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (24.12.2024) முகாம் அலுவலகத்தில், கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி கிறிஸ்துவ திருச்சபைகளின் அருட்சகோதரிகள் சந்தித்த போது, அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் உள்ளனர்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை (24.12.2024) முகாம் அலுவலகத்தில், கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி கிறிஸ்துவ திருச்சபைகளின் அருட்சகோதரிகள் சந்தித்த போது, அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் உள்ளனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் நகராட்சியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் 90 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.33.41 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், ஒன்றியக் குழுத்தலைவர் சரஸ்வதி மனோகரன், திருப்பெரும்புதூர் வருவாய் கோட்டாட்சியர் ஐ.சரவணக்கண்ணன், குன்றத்தூர் நகரமன்றத் தலைவர் கோ.சத்தியமூர்த்தி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் இரா. மலர்விழி ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.12.2024) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ. ராசா எம்.பி. உள்ளார்.

# ‘ஹூஸ்டன் தமிழாய்வுகள் இருக்கை’ சிறப்பாகச் செயல்படட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை,டிச.25-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஹூஸ்டன் தமிழாய்வுகள் இருக்கை சிறப்பாக செயற்பட வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவின் நான்காவது பெருநகரமான ஹூஸ்டன் மாநகரத்தில் 1927ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் தமிழ்மொழி ஆராய்ச்சிக்காக தமிழ் இருக்கை நிறுவிட தமிழ்நாடு அரசு இதுவரை 3,44,41,750/- (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்து நான்கு இலட்சத்து நாற்பத்து ஓராயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்) வழங்கியுள்ளது.

மேலும் தமிழ்நாடு அரசு மாபெரும் கொடையாளராக மிளிரும் என்பதைக் கருத்திற்கொண்டு இந்திய ரூபாய் மதிப்பில் ரூ.1,50,00,000/- (ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம்) வழங்கப் பட்டதோடு, அவர்களால் வழங்கப்பட்ட வாழ்த்துரைச் செய்தியாக.

**“தமிழின் தொன்மையும், செறிவும், வளமும் நம் அனைவரையும் என்றும் பெருமிதம் கொள்ளச் செய்யும். அதே சமயம், தன்னைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டே வருவதால் நம் தமிழ் மொழி என்றும் புதுமையுடன் திகழ்கிறது என்பதிலும் நாம் பெருமையடைகிறோம். அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் அமைந்துள்ள ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆய்வுகள் இருக்கையை நிறுவிட சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அறிந்து மகிழ்கிறேன்.**

**தமிழ்ப் பண்பாட்டின் குன்றாத வளமையைப் பாரெங்கும் பறைச் சாற்றுவதிலும், எதிர்கால தலைமுறையினரை ஊக்கப்படுத்துவதிலும், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் தமிழர்களின் வர்த்தகம், பண்பாடு மற்றும் பாரம்பரியத்தை மேம்படுத்துவதிலும் ஹூஸ்டன் தமிழாய்வுகள் இருக்கை சிறப்பான பங்காற்றும் என நான் உறுதியாக நம்புகிறேன்.**

**கடல்கடந்தும் தமிழால் இணைந்து வாழ்ந்துவரும் அனைத்துத் தமிழ் நெஞ்சங்களுக்கு என் இனிய நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்”**

என்ற அவர்களின் வாழ்த்துச் செய்தி 12.12.2024 வியாழக்கிழமையன்று பிற்பகல் 2.00 மணியளவில் அமெரிக்காவில் உள்ள ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆய்வுகள் இருக்கை சார்பாக நடைபெற்ற விழாவில் படிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் சார்பாக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் வே. ராஜாராமன் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் கலந்து கொண்டனர். ஹூஸ்டன் தமிழ் ஆய்வுகள் இருக்கை அமைப்பின் தலைவர் சொக்கலிங்கம் சாம் கண்ணப்பன் மற்றும் செயலாளர் பெருமாள் அண்ணாமலை ஆகியோர் உடன் இருந்தனர்.





சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராசன் மாளிகையில் உள்ள சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட்டரங்கில் நேற்று (24.12.2024) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் 2024– 2025ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்தும், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ சார்பில் பல்வேறு நூலகங்களை மேம்படுத்தி முதல்வர் படைப்பகம் (பகிர்ந்த பணியிடம் மற்றும் கல்வி மையம்) அமைப்பது தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, அ.பாலசுப்ரமணியன், கோயம்பேடு தலைமை நிர்வாக அலுவலர் திருமதி.மு. இந்துமதி, கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், நா.பாலமுருகன், திட்ட ஆலோசகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 2 கோடி முட்டைகள் இறக்குமதி செய்ய ஓமன் அரசு ஒப்புதல்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கோழிப்பண்ணையாளர் சங்கத்தினர் நன்றி!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி க்கு பாராட்டு!

*நாமக்கல், டிச.25*

*2 கோடி முட்டைகள் இறக்குமதி செய்ய ஓமன் அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக கோழிப்பண்ணையாளர்கள் சங்கத்தினர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி க்கு பாராட்டும் தெரிவித்துள்ளனர்.*

*நாமக்கல்லில், செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்க தலைவர் சின்ராஜ் கூறியதாவது:*

*ஓமன் துறைமுகத்தில் கடந்த 1 வாரமாக கப்பலில் இருந்து ரூ.15 கோடி மதிப்பிலான முட்டைகள் இறக்குமதி செய்யப்படாமல் இருந்தது. அதன் காரணமாக கோழிப்பண்ணையாளர்கள் மற்றும் முட்டை ஏற்றுமதியாளர்களுக்கு தொழில் பாதிப்பு ஏற்பட்டதோடு, பெருத்த நஷ்டம் ஏற்படும் நிலை உருவானது. இதையடுத்து கோழிப்பண்ணையாளர்கள் மற்றும் முட்டை ஏற்றுமதியாளர்கள் சார்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு எம்.பி.க்கள் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், வி.மாதேஸ்வரன் ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.*

*அதைத் தொடர்ந்து ஓமனில் கப்பலில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்குமாறு நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், மத்திய மந்திரி ஜெய்சங்கரிடம் நேரில் மனு அளித்து வலியுறுத்தினார். அவருடன் மாதேஸ்வரன் எம்.பி.யும், சேர்ந்து கோழிப்பண்ணையாளர்களின் கோரிக்கைகளை தொடர்ந்து நாமக்கல்லிருந்து ஓமன் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ரூ.15 கோடி மதிப்பிலான முட்டைகள் தற்போது அந்நாட்டின் துறைமுகத்தில் கப்பலில் உள்ளது. நாமக்கல்லிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட முட்டைகளை உடனே இறக்குமதி செய்ய திடவும் அதே போன்று கத்தார் நாட்டில் முட்டை ஏற்றுமதியில் உள்ள கட்டுப்பாடுகளை நீக்கிடவும், ஒன்றிய வெளியுறவு துறை அமைச்சர் டாக்டர்.ஜெய்சங்கர் அவர்களை சந்தித்து விளக்கமாக எடுத்து கூறி அதற்கான கோரிக்கை மனு கொடுத்தார்.அதன் அடிப்படையில் அமைச்சர் ஓமன் நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட முட்டைகளை உடனே இறக்குமதி செய்திடவும் மற்றும் கத்தார் நாட்டில் முட்டை ஏற்றுமதியில் உள்ள கட்டுப்பாடுகளை நீக்கிடவும் விரைந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். மேலும் மத்திய, மாநில அரசுகளிடம் எடுத்துரைத்து தொழில் பாதுகாப்பிற்கு உரிய உதவிகளை செய்து வருகிறார்கள். அவர்களின் முயற்சியால் ஓமனில் இறக்குமதி செய்யப்படாமல் இருந்த முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டது.*



*மேலும் நேற்று முட்டை ஏற்றுமதியில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக நாமக்கல் ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதில் மாநில அரசின் முதன்மை செயலாளர், அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அதிகாரிகள் ஆன்லைன் மூலம் கலந்து கொண்டனர்.*

*அதில் ஓமனிற்கு கப்பலில் 11 கண்டைனர்களில் சென்று கொண்டிருக்கும் முட்டைகளையும் இறக்குமதி செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கலெக்டர் உமா வலியுறுத்தினார். மேலும் கத்தாரில் முட்டை ஏற்றுமதி தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்கவும், அந்நாட்டு அரசிடம் ராஜேஸ்குமார் எம்.பி. வலியுறுத்தி உள்ளார். விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார்.*

*எனவே கோழிப்பண்ணையாளர்கள், முட்டை ஏற்றுமதியாளர்கள் சார்பில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், எம்.பி.க்கள் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், வி.மாதேஸ்வரன் மற்றும் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச.உமா ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இதுகுறித்து முட்டை ஏற்றுமதியாளர் சங்க பொருளாளர் கேசவன், ராணா ராஜேந்திரன் ஆகியோர் கூறும்போது, நாமக்கல் முட்டைகளை ஓமன் நாட்டில் இறக்குமதி செய்வதில் நீடித்த பிரச்சனைக்கு கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வேகமாக செயல்பட்டு தீர்வு ஏற்படுத்தி கொடுத்துள்ளார். அவருக்கு எங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.*

*இவ்வாறு தலைவர் சின்ராஜ் கூறினார். அவருடன் செயலாளர் சுந்தரராஜ், முட்டை ஏற்றுமதியாளர்கள் சங்க நிர்வாகி வல்சன் ஆகியோர் உடனிருந்தனர்.*



ஆவடி அருகே வீராபுரம் பகுதியைச் சேர்ந்த சிறுமி தான்யா அரிய வகை முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பெரும் முயற்சியால் நலம் பெற்ற சிறுமிக்கு திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு புத்தாடை மற்றும் சிறப்பு பரிசுகளை வழங்கி வாழ்த்தி கூறினார்.